[2010 மே 14

செய்யப்பட்டு விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. மேலும், "நித்தம் ஹெர்பல்" என்ற மூலிகை சோப்பும் புதிதாக அறிமுகப்படுத்தப்பட்டு தற்போது உற்பத்தி செய்யப்பட்டு வருகிறது. திருக்கழுக்குன்றத்திலுள்ள சோப்பு அலகு அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளதால், மீண்டும் அபிவிருத்தி செய்ய வேண்டிய அவசியம் இல்லை.

[**குறிப்பு :** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. தகவல் கோரல்

(அ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள்

திரு. பி.கே. சேகர்பாபு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே . . .

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே . . .

திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே . . .

திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே . . .

திரு. தி. வேல்முருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே . . . *(குறுக்கீடு)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.கே. சேகர்பாபு. *(குறுக்கீடு)* Wait for a minute. உங்கள் பிரச்சினைக்கு வருகிறேன். *(குறுக்கீடு)* I will come to that.

(ஆ) காலாவதியான, போலி மருந்துகள் பிரச்சினை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. பி.கே. சேகர்பாபு, சொல்லுங்கள்.

2010 மே 14]

திரு. பி.கே. சேகர்பாபு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தை மாத்திரமல்ல, இந்தியத் திருநாட்டையே இதயம் குலுங்க வைத்த பிரச்சினை, போலி மற்றும் காலாவதி மருந்துப் பிரச்சினை என்பதை நாம் அனைவரும் அறிவோம். கடந்த மாதம் 20 ஆம் தேதிகூட இதே அவையிலே காலாவதி, போலி மற்றும் தரமற்ற மருந்துகளைப் பற்றி எழுப்பப்பட்டது....*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: One minute. *கேளுங்கள் முதலிலே. நீங்கள் இன்றைக்குக் காலையிலே இந்தப் பிரச்சினை பற்றி அறிவிப்புக் கொடுத்திருக்கிறீர்கள். ஏற்கெனவே இந்த விவகாரம் அவையிலே கவன ஈர்ப்பாக எடுக்கப்பட்டு, விவாதிக்கப்பட்டு, அதன்மீது மாண்புமிகு அமைச்சர் தரப்பிலேயிருந்து பதிலும் சொல்லப்பட்டுவிட்டது. இப்போது இரண்டாவதாக அதையே திரும்ப எடுக்கக்கூடிய நிலையில் இல்லை. (குறுக்கீடுகள்) அடுத்ததாக, விதியிலே என்ன சொல்லப்பட்டிருக்கிறது என்பதை முதலிலே தெரிந்துகொள்ளுங்கள். (குறுக்கீடுகள்) கொஞ்சம் முதலிலே கேளுங்கள். 'அதே கூட்டத் தொடரில் ஒரு ஒத்திவைப்புத் தீர்மானத்தின் வாயிலாகவோ அல்லது வேறு வகையிலோ, பேரவையில் விவாதிக்கப்பெற்ற ஒரு பொருள் பற்றி மீண்டும் விவாதம் எழுப்புவதாகத் தீர்மானம் இருத்தல் ஆகாது'. அதுதான் விதி. (குறுக்கீடு) அடுத்ததாக, நீங்கள் கொடுத்திருக்கிற* issue *இப்போது* police *விசாரணையிலே இருக்கிறது. (குறுக்கீடு) நான் சொல்கிறேன், கேளுங்கள்.* Police *விசாரணையில் இருக்கிறது.* It is under investigation. Investigation-*லே இருக்கிற விஷயத்திலே யாரும் தலையிடக்கூடாது. அதுதான் முறை. (குறுக்கீடு) அதனாலே,* if you want any representation, *எதுவென்றாலும் நீங்கள் ஏதாவது சொல்ல வேண்டுமென்றால்* police-*லே போய்ச் சொல்லுங்கள். அவ்வளவுதான். (குறுக்கீடு) கூடுதல் விவரங்களை நீங்கள்* police station-*லே போய்ச் சொல்லுங்கள்.* The matter is under investigation. (Interruptions) *அனுமதியில்லை. விதி 65. அதிலே பாருங்கள்,* sub-clause (iv)-*லே என்ன இருக்கிறது என்று பாருங்கள். அதற்கப்புறமும் நீங்கள் ஏதாவது சொல்ல வேண்டுமென்று நினைத்தால், அந்த வழக்கு சம்பந்தப்பட்டதிலே ஏதாவது சொல்ல வேண்டுமென்று நினைத்தீர்கள் என்றால்,* police station-*லே போய், "எங்களுக்குப் புதிதாக* evidence *கிடைத்திருக்கிறது, அந்த* evidence *இதோ இருக்கிறது, இது சம்பந்தமாக விசாரியுங்கள்" என்று சொல்லுங்கள். அதுதான் முறை. (குறுக்கீடுகள்) சட்டமன்ற விதிப்படி, இரண்டாவது முறை அந்தப் பொருள் குறித்து*

விவாதிக்க முடியாது. (குறுக்கீடுகள்) மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள். (குறுக்கீடுகள்)

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எந்தப் பிரச்சினையை இந்த அவையில் எழுப்புவதாக இருந்தாலும் அவைத் தலைவர் அனுமதித்தால்தான் எழுப்புவதற்கு நியாயம் உண்டே தவிர, அனுமதிக்காவிட்டாலும் ஒரு பிரச்சினையை எழுப்புவேன் என்றால், இந்த அவையில் ஓர் எதிர்ப்புத் தெரிவிப்பதற்காகத் தொடங்குகிற ஒரு காரியமாகத்தான் நான் இதைக் கருதுகிறேன். எனவே, பேரவைத் தலைவர் அவர்கள் விதிப்படியும், முறைப்படியும் அனுமதிக்கத் தேவையில்லை. (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஓ. பன்னீர்செல்வம், வேறு ஏதாவது பொருள் குறித்து raise பண்ணுகிறீர்களா? (குறுக்கீடு) வேறு விஷயம் குறித்து ஏதாவது raise பண்ணுகிறீர்களா? (குறுக்கீடு) நான் என்னுடைய முடிவைச் சொல்லிவிட்டேன். (குறுக்கீடு) வேறு ஏதாவது விஷயம் இருக்கிறதா என்றுதான் கேட்கிறேன். (குறுக்கீடுகள்) இந்தப் பிரச்சினையை எடுக்க முடியாது என்று நான் சொல்லிவிட்டேனே! (குறுக்கீடுகள்) விதியிலே தெளிவாக இருக்கிறது. விதி 65, sub-clause (iv)-ஐ எடுத்துப் படித்துப் பாருங்கள். (குறுக்கீடு) ஒரு வழக்கு, ஒரு விஷயம் ஏற்கெனவே விவாதிக்கப்பட்டதற்குப்பிறகு மீண்டும் அதை எடுக்கக்கூடாது என்று விதியில் இருக்கிறது. (குறுக்கீடு) அதில், அதற்குப்பிறகு கூடுதல் விவரங்கள் இருக்கின்றன என்றால், police station-லே போய்ச் சொல்லுங்கள். The case is pending in police station. The case is under investigation. (Interruptions)

அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் அவையிலிருந்து வெளியேறினர்

(இ) வறட்சி மாவட்டங்களில் உள்ளோர்க்கு நிவாரண நிதி வழங்குதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்தது, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி.